# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


**ஆண்டு: 8** **திகதி: 23.06.2018**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி ச. பாலகங்காதரன்**

மாணவர் பெயர்: ---------------------------------------------------

| வினாக்கள் | புள்ளிகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

1. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.

(20 புள்ளிகள்).

1.1 ஆணையிட்டார்

1.2 கம்பர்

1.3 இளமைப்பருவம்

1.4 கல்வி

1.5 பேரிடர்

1.6 தொலைபேசி

1.7 இராசேந்திர சோழன்

1.8 செம்மொழி

1.9 மழைக்காலம்

1.10 புத்தகம்

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

2. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொல்லை எழுதுக.

(10 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| துடிப்பது | பெற்றோம் | கடுங்காற்று | காத்து | ரசம் |
| சுழன்றதால் | அடைக்கப்பட்டார் | திறமையை | மலர்ந்தது | ஆளாகாது |

2.1 நேற்று வீசிய ........................ பல மரங்களை வேரோடு சாய்த்து விட்டது.

2.2 மின்விசிறி வேகமாக ........................ ஆசிரியிரின் மேசையிலிருந்து தாள்கள் பறந்தன.

2.3 இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் கேட்டுப் போராடிய காந்தியடிகள் ஆங்கிலேயரால் சிறையில் ............................

2.4 ஒவ்வொருவரும் தம்மிடம் இருக்கும் ........................... வெளிப்படுத்திச் செயற்பட்டால், வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

2.5 தாய் தன் குழந்தையை கண்ணின் இமை போல் ......................... வந்தாள்.

2.6 கடிதத்தைப் படித்துப் பார்த்த திவ்யாவின் முகம் .........................

2.7 மாணவர்கள் தீய பழக்கங்களுக்கு .......................... தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.

2.8 நேற்றுக் கலை நிகழ்ச்சியில் பாடிய நாங்கள் பரிசுகள் .....................

2.9 இருதயம் ................... நின்றால் உடல் இயக்கம் நின்றுவிடும்.

2.10 அம்மா தோடம்பழத்தைப் பிழிந்து ..................... எடுத்தார்.

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

3. இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.
(15 புள்ளிகள்)

3.1 நாதன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது மழை பெய்தது.

______________________________

______________________________

3.2 கம்பர் ஆதரிப்பார் யாருமின்றி வறுமையில் வாடினார். அப்போது சடையப்பர் என்ற வள்ளலை சந்தித்தார்.

______________________________

______________________________

3.3 சிறுவன் காலணிகளை கண்ணாடிப் பேழையில் பார்த்தான். அவன் அதை வாங்க விரும்பினான்.

______________________________

______________________________

3.4 தீபாவின் தாயார் ஓர் அழகான ஓவியத்தை வாங்கினார். அவர் அதை வீட்டுக் கூட்டத்தில் தொங்கவிட்டார்.

______________________________

______________________________

3.5 சீதா நூல்நிலையத்திற்குச் சென்றாள். அவள் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினாள்.

______________________________

______________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

4. பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(15 புள்ளிகள்)

மக்கள் தங்களை அழகு செய்து கொள்ள நவமணிகள் பதித்த அணிகலன்களை அணிந்து வருகின்றனர். ஒன்பது வகை மணிகளை நவமணிகள் என்று அழைப்பர். நவமணிகளில் முத்தையும் பவளத்தையும் தவிர மற்றவை எல்லாம் பூமியிலிருந்து கிடைக்கின்றன.

இன்று நம் பெண்கள் பெரிதும் விரும்பி அணியும் ஆபரணங்களுள் ஒன்று முத்து ஆபரணம் ஆகும். முத்து கடல் வாழ் உயிரினமான சிப்பியிலிருந்து உருவாகிறது. அதன் உடலில் மணல் போன்ற ஏதேனும் ஒரு சிறு பொருள் தைக்கும்போது அது அப்படியே தங்கிவிடுகிறது. அப்போது முத்துச்சிப்பியின் உடலிருந்து சுண்ணாம்பு கலந்த நீர் வெளியாகி அந்தப் பொருளைச் சுற்றிப் படிந்து உறுதியாகிவிடுகின்றது. இவ்வாறு வளர்ந்த பொருள் முத்து எனப்படுகிறது. முத்து முழு வளர்ச்சியடைய ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் ஆகின்றன.

கடலுக்கு அடியில் சென்று முத்துச்சிப்பிகளை எடுத்து வருவோரை நாம் முத்துக்குளிப்போர் என அழைக்கிறோம். அவர்கள் கடலுக்கடியில் சென்று முத்துக்களை எடுத்து வருகின்றனர். இவ்வாறு செய்யும்போது முத்துக்குளிப்பவர் நீரினுள் நெடுநேரம் இருக்க நேர்ந்தால் அவர்கள் மூச்சுத் திணறி விடுவதும் உண்டு. கடலில் வாழும் பெரிய சுறாமீன்கள் முத்துக்குளிப்போரைத் தாக்கிக் கொன்றுவிடுவதும் உண்டு.

கிடைப்பதற்கு அரிய முத்து விலையுயர்ந்த ஒரு பொருளாகவே இருந்து வருகிறது. இருப்பினும் பல நாட்டு மாதர்கள் முத்தை அணியப் பெரிதும் விரும்புகின்றனர். இதையுணர்ந்த மிகிமோட்டோ என்ற ஜப்பானியர் செயற்கை முறையில் முத்து வளர்க்கும் தொழிலைத் தோற்றுவித்தார். அவர் முத்துப் பண்ணையை அமைத்தார். அதில் முத்துச்சிப்பிகளை வளர்த்து முத்துகளை எடுத்தார்.

ஆவை தோற்றத்தில் இயற்கை முத்தினை ஒத்திருந்த போதிலும் அவற்றின் அழகும் ஒளியும் இயற்கை முத்திற்கு ஈடாக இருப்பதில்லை. எனினும், விலையுயர்ந்த இயற்கை முத்தினை வாங்க இயலாதவர்கள் இவ்வகை முத்தினை வாங்கி அணிவதற்கு அவரின் கண்டுபிடிப்பு உதவிற்று.

4.1 நவமணிகள் கிடைக்கும் இடங்கள் யாவை?

______________________________

______________________________

4.2 முத்து எப்படி உருவாகின்றது?

4.3 முத்துக்குளிப்போர் எதிர்நோக்கும் ஆபத்துக்கள் யாவை?

4.4 ஏன் மிகிமோட்டோ என்ற ஜப்பானியர் செயற்கை முத்தை உருவாக்கினார்?

4.5 செயற்கை முறையில் தயாராகும் முத்து இயற்கை முத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

5 பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி 80 சொற்களுக்கு குறையாது ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

5.1 உடல் நலனில் அக்கறையற்ற உனது தோழன்/தோழிக்கு ஆரோக்கிமான உணவும், உடற்பயிற்சியும், நல்ல பழக்கவழக்கங்களும் அவசியம் என்பதை விளக்கி ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

5.2 தமிழ் மொழியையும், பண்பாட்டையும் வளர்ப்பதற்கு தமிழ்ப்பள்ளி ஆற்றிவரும் தொண்டுகள் சிறப்புக்கள் குறித்து வெளிநாட்டில் வாழும் உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **6** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **11** |

6. பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து எடுத்து 150 சொற்களுக்குக் குறையாது ஒரு கட்டுரை எழுதுக.

(20 புள்ளிகள்)

6.1 ஒரு குடையின் சுயசரிதை.

அல்லது

6.2 எமது பாடசாலையில் இவ்வருடம் நடைபெற்ற கலைவிழா.